ஆயத்த அணிகல அங்காடி
(சுவர்ண மாளிகை)
போன்: 268
P. A. ராஜு செட்டியார் & பிரதர்
வைர நகை வியாபாரிகள்,
பெரியகடை வீதி, கோயமுத்தூர்.

இடி

ஆசிரியர்:
பண்டிட் ஜெயிலானி, M. A. (U. S. A.) "விஷாரத்"
தாராபுரம்.

"நகுதற் பொருட்டன்று நட்டல், மிகுதிக்கண்
மேற்சென் றிடித்தற் பொருட்டு"

ஆயத்த அணிகல அங்காடி
(சுவர்ண மாளிகை)
போன்: 268
P. A. ராஜு செட்டியார் & பிரதர்
வைர நகை வியாபாரிகள்,
பெரியகடை வீதி, கோயமுத்தூர்.

இடி 1 | தமிழ் வாரச் செய்தித் தாள். 19–12–51 புதன்கிழமை | ஒலி 18

ஸ்ரீ வெங்கிடசாமி நாயக்கர் அவர்களுக்கு மகத்தான ஆதரவு!

[நேரில் கண்டவர்]

கோவையில் நடைபெறப்போகும் சட்டசபைத் தேர்தலில் காங்கிரஸ் தோல்வியுறலாம் என்று தெரிகிறது சுயேட்சை அபேட்சகர் **ஸ்ரீவெங்கிடசாமி நாயக்கர் B. A. B. L.,** அவர்களுக்கு பெருவாரியான ஆதரவு இருப்பதாக அறிகிறோம். ஸ்ரீவெங்கிடசாமி நாயக்கர் அவர்கள் நேர்மையும் கண்ணியமும் வாய்ந்தவர். யாதொரு தகராறுகளிலும் தலையிடாதவர். கல்விக்காகப் பல உதவிகளைச் செய்தவர். ஹாஸ்டல் தோற்றுவிப்பதற்கு உறுதுணையாக நின்றவர் செனட் சபையில் அங்கம் வகித்து பல அரிய விஷயங்களை சாதித்திருக்கிறார். கோவை நகர சபையிலும் அங்கத்தினராக இருக்கிறார். (Administration) ஆட்சி முறை தெரிந்தவர். மற்ற காங்கிரஸ் அபேட்சகர்கள்போல் மந்திரி பதவி பெறலாம் என்று முன்கூட்டியே திட்டமிட்டு சட்டசபையைக் கைப்பற்ற நினைக்காதவர். பர்மிட் வாங்கி கொடுத்துப் பெரிய மனிதர் தயவை சம்பாதித்துக் கொள்ள சட்டசபையில் புகுபவர் அல்ல. வானத்தை வில்லாக வளைக்கிறேன். மேகத்தை குடையாக சிருஷ்டிக்கப் போகிறேன் என்று பொய்மூட்டைத் திட்டங்களைக்கூறி அபேட்சகராக நிற்கவில்லை. 'தம்மால் இயன்ற சேவை செய்கிறேன்' என்று கூறியே தேர்தல் பிரசாரம் செய்பவர். வார்டு வார்டாக இவரை ஆதரிக்கும் இளைஞர்களையும், தொண்டர்களையும் கோவையில் காணலாம். காங்கிரசுக்கு நல்ல பாடத்தை கோவை சற்பிக்கப்போகிறது என்று தெருவெல்லாம் பேசிக் கொள்கின்றனர். இவரைப் போட்டியிடும் ஏனைய எதிர்கட்சியினர் பொய்ப்பிரசாரம் செய்ய துவங்கி இருக்கிறார்கள். ஸ்ரீ வெங்கட்டசாமி நாயக்கருக்கு மில் முதலாளிகள் எல்லாம்



திரு. வெங்கிடசாமி நாயுடு B. A. B. L., தேர்தல் பிரசாரம் செய்கிறார்.

வேலை செய்கின்றனர் என்று. ஏன்? மில் முதலாளிகள் வேலை செல்வது தவறா? அவர்களுக்கும் வாக்குரிமை இல்லையா? வேறு ஒரு மில் முதலாளியை காங்கிரஸ் இத்தேர்தலில் நிறுத்தியிருக்குமானால் அப்பொழுது மில் முதலாளிகள் வேலைசெய்துதானே தீருவார்கள்?

அப்படி வேலை செய்யும்பொழுது காங்கிரஸ் பக்தர்கள் என்ன பிரசாரம் செய்வார்களோ தெரியாது? ஏன்? வடநாட்டுப் பணமூட்டை தினமணிச் சொந்தக்காரர் ஸ்ரீ கோயங்கா அவர்களை இதே காங்கிரஸ் ஸ்தாபனம் திண்டிவனம் தொகுதியில் நிறுத்தி வைத்திருக்கிறார்கள். அவருக்கு எத்தனையோ பணக்காரர்கப் பிரமுகர்கள் வேலை செய்கிறார்கள். அங்கெல்லாம் காங்கிரஸ்காரர்கள் வாய்மூடி மௌனியாகவும் இருக்க இந்த கோவையில் மாத்திரம் இந்தப் பிரசாரம் செய்வது எவ்வளவு மட்டரகமான மனப்போக்கு என்பதைத் தெரியலாம். இடத்திற்கு ஏற்றவாறு திட்டமிட்டு பாமர மக்களை பொய்பிரசாரமூலம் ஏமாற்றி வாக்குரிமைகளைப் பரிக்கலாம் என்று கருதும் காங்கிரஸ்காரர்களுக்கு கோவை நகரம் நல்ல பாடத்தைக் கற்பிக்கும் என்று நம்புகிறோம். ஸ்ரீ வெங்கிடசாமி நாயக்கரை பணக்காரர் என்று கூறுவதால் மாத்திரம் காங்கிரஸ் ஏழைகள் ஸ்தாபனமாகிவிடுமா? இல்லை. அரசியல் வரலாற்றைப் புரட்டிப்பார்த்தால் காங்கிரஸ் ஸ்தாபனம் பெரும் பணம் மூட்டைகளான பிர்லா கோயங்கா, டாடா, போன்றவர்களுடைய மாளிகையில் தான் வளர்ந்தது. இதையாரும் மறுக்கமுடியாது. ஏன் இன்று ராமநாதபுரம் தொகுதியில் ராமநாதபுரம் மகாராஜா ஷண்முகநாத சேதுபதியை காங்கிரஸ் அபேட்சகராக நிறுத்தியிருக்கிறது. அவரை

எதிர்த்து நிற்பவர் யார் தெரியுமா? ஸ்ரீமான் முத்துராமலிங்கத் தேவர் தான்! சென்ற தேர்தலில் காங்கிரஸ் ஸ்ரீமான் தேவரை அபேட்சகராக நிறுத்தியது. இந்தத் தேர்தலில் ராஜாவை அபேட்சகராக நிறுத்தியிருக்கிறது. அப்படிப்பட்ட காங்கிரஸ் ஸ்தாபனத்தார்தான் ஸ்ரீமான் வெங்கிடசாமி நாயக்கரை பணக்காரர் என்று சொல்கிறது. இந்த மாதிரி மக்களை ஏமாற்றுவதற்காகச் செய்யும் பொய்ப்பிரசாரத்திற்கு கோவை மக்கள் முடிவு கட்டுவார்கள் என்று நம்புகிறோம். இன்னும் காங்கிரஸ்காரர்களும் இதர கட்சியினரும், ஸ்ரீ வெங்கிடசாமி நாயக்கர் அவர்கள் வகுப்புவாதப் பிரசாரம் செய்து நாயுடுமார்கள் ஓட்டைப்பெற சூழ்ச்சி செய்கிறார் என்றும் துஷ்பிரசாரம் செய்கிறார்கள். ஆனால் அதே காங்கிரஸ் ஸ்தாபனம் வேறு பல தொகுதிகளில் வகுப்புமுறையை அநுசரித்துத்தான் அபேட்சகர்களை நிறுத்தி இருக்கிறது. உதாரணமாக தாராபுரம் தொகுதி இரண்டிலும் கவுண்டமார்கள் அதிகமிருப்பதால் கவுண்டர்களையே நிறுத்தியிருக்கிறார்கள். ஸ்ரீவில்லிபுத்தூரில் நாடார்கள் அதிகமாக இருப்பதால் ஸ்ரீ காமராஜ் நாடாரை நிறுத்தி வைத்திருக்கிறது. இம்மாதிரி எங்கெந்த இடங்களில் வகுப்புமுறையை ஒட்டி அபேட்சகர்களை நிறுத்தி இருக்கிறார்களோ அங்கெல்லாம் ஆதரித்துப்பேசும் இவர்களுக்கு வகுப்புவாதமாக தெரியவில்லை. ஆனால் இந்த கோவை மாத்திரம் அவர்கள் கண்களுக்கு வகுப்புவாதமாக தெரிகிறது. தங்களுக்குச் சாதகமானால் ஆதரித்தும் பாதகமானால், வகுப்புவாதிகள் என்றும் பிரசாரம் செய்வதே இவர்களது வழக்கமாக போய்விட்டது.

பொதுவாக இன்று மக்கள் காங்கிரஸ் பேரில் நம்பிக்கை இழந்து விட்டனர். அவர்கள் சென்ற தேர்தலில் என்னவெல்லாம் செய்யப்போகிறோம் என்று சொன்னார்களோ அவைகளை ஒன்றும் நிறைவேற்றவில்லை. எதை சொல்லவில்லையோ அவைகளை எல்லாம் நிறைவேற்றிவிட்டார்கள். இதனால் மக்கள் அடைந்த வேதனைக்கு எல்லை இல்லை. பஞ்சம் தலைவிரித்தாடியது. வேலையில்லாத் திண்டாட்டம் லஞ்ச ஊழல் முதலிய கொடுமைகளுக்கு ஆளாகினோம். இவர்களிடம் விடுதலை பெற்று நல்லாட்சியை நாட்டில் அமைக்க இத்தேர்தல் வந்திருக்கிறது. இதில் பொதுமக்கள் ஏமாறாமல் விழிப்படைந்து நேர்மையான அபேட்சகருக்கு தங்களுடைய வாக்குரிமையை தரவேண்டுகிறோம். துர்பாக்கியமாக ஒவ்வொரு இடத்திலும் பலசுயேட்சை அபேட்சகர்கள் காங்கிரசை எதிர்த்து போட்டியிடுகின்றனர். இதனால் ஓட்டுகள் பல பிரிவாகப் பிரிந்து காங்கிரஸ்காரர்கள் வெற்றிபெறுகிற நிலை வந்து விடலாம். ஆதலால் புத்திசாலித்தனமாக மக்கள் ஆதரவு அதிகம் உள்ள சுயேட்சை அபேட்சகர் ஒருவருக்கே ஒருமுகமாக தங்கள் வாக்குகளை அளிக்கவேண்டும். தற்பொழுது கோவை இருக்கும் நிலையை ஆராய்ந்தால் ஸ்ரீமான் வெங்கிடசாமி நாயக்கருக்குப் பேராதவு இருப்பதாக்த் தெரிகிறது. ஆதலால் அவருக்கே எல்லோரும் தங்கள் வாக்குகளைத்தந்தால் காங்கிரஸ் படுதோல்வி அடையுமென்பது நிச்சயம்!

கம்யூனிஸ்ட்களும், சோஷலிஸ்ட்டுகளும், காங்கிரசை ஒழித்துக் கட்ட வேண்டுமென்று பேசுகிறார்களே தவிற, நடைமுறையில் காங்கிரஸ்காரர்கள் வெற்றிபெறக்கூடிய சூழ்நிலையைத்தான் வேறு பல தொகுதியில் உண்டுபண்ணுகிறார்கள். இவர்கள் அனைவரும் கூட்டாக நின்று வெற்றி பெறும் சுயேட்சை அபேட்சகர்களுக்கு ஆதரவு தருவதில்லை. தாங்கள் இத்தேர்தலில் போட்டி இடுவதால் வெற்றி கிடைக்காது என்று தெரிந்தும் போட்டியிடுகிறார்கள். இதனால் காங்கிரஸ் பலப்படுகிறதேயல்லாமல், அவர்கள் பிரசாரம் செய்வதுமாதிரி ஒழிவதாகத் தெரிவதில்லை. ஆகவே இத்தகைய மனப்போக்கை மாற்றி கோவையிலுள்ள மக்கள் செல்வாக்கை பெற்ற ஸ்ரீமான் வெங்கிடசாமி நாயக்கர் அவர்களுக்கு காங்கிரஸ் அல்லதா ஏனைய அரசியற்கட்சியினரும், ஒத்துழைத்து காங்கிரசை படுதோல்வியடையச் செய்வார்கள் என்று நம்புகிறோம். அவ்வாறு ஏனைய அரசியற் கட்சிகள் தங்கள் மனப்போக்கை மாற்றாவிடில், வாக்காளர்கள் அவர்கள் பேச்சுக்கு மயங்காமல் தாங்களே திடமான எண்ணத்துடன் ஸ்ரீ வெங்கிடசாமி நாயக்கர் அவர்கட்குஒருமுகமாகவாக்களிப்பதில் கண்ணும் கருத்துமாக இருக்க வேண்டுகிறோம். காங்கிரஸை ஒழித்துக் கட்டவேண்டுமென்றால் இதைத் தவிற வேறு வழி இல்லை.

பொதுவாக மக்களுக்கு எந்தக் கட்சியின் பேரில் நம்பிக்கை இல்லாமல் போய்விட்டது. ஏனெனில் அறுபது ஆண்டுகளாக வளர்ந்த பெரிய கட்சியாகிய காங்கிரஸ் ஸ்தாபனமே தவறான பாதையில் சென்று கொண்டிருக்கிறது அப்படி இருக்க சிறு கட்சிகளின் பேரில் நம்பிக்கை எப்படி ஏற்படமுடியும்? சிறு கட்சிகளை நம்பமுடியாத அளவுக்குக் கொண்டுவந்தது காங்கிரஸ்தான். ஆக காங்கிரஸை ஒழித்தால்தான் ஏனைய கட்சிகளையும் உருவாக்க முடியும். காங்கிரசுக்கு முடிவு கட்டும் நாள்வரை சுயேட்சையாகவே ஒருமுகப்பட்டு போராடி காங்கிரசை ஒழித்துக் கட்டவேண்டும். பிறகுதான் கட்சிகள் தோன்றவேண்டும். அதுவரை கட்சிகளுக்கு வேலையில்லை.

ஸ்ரீ வெங்கடசாமி நாயக்கர் அவர்களைப்பற்றி சில காங்கிரஸ் தோழர்கள் துஷ்பிரசாரம் செய்து வருகிறார்கள். அதற்குக் காரணம் காங்கிரஸ் அபேட்சகரைப் போட்டியிடுகிறார் என்பதற்காகத்தான். (5-ம் பக்கம் பார்க்க)

சந்திரன் காலேஜ் ஸ்கூல்,
298, இடையர் வீதி, கோயமுத்தூர்.
1 வருஷத்தில் 14-வயதுக்கு மேற்பட்ட ஆண் பெண்கள் E. S. L. C. க்கும், 20.வயதுக்கு மேற்பட்டவர்கள் மெட்ரிகுலேஷனுக்கும். 9ம் வகுப்புவரை ஹைஸ்கூல்களிலும் சேரலாம் S. SL. C இண்டர் வகுப்பு ஹாஸ்டல் உண்டு.
தலைவர்- C R. Chandran.

உபயோகி

யுங்கள்.

வர்த்தக வளர்ச்சிக்கு
வஸந்தா தியேட்டரில்
சிலைடு விளம்பரம் செய்யுங்கள்
தாராபுரம்.

தாராபுரத்தில் சேனாபதிக் கவுண்டர் அவர்கட்கு பேராதரவு!

[இந்த வார தேர்தல் மீட்டர்]

தாராபுரம் தொகுதியில் சட்டசபைத் தேர்தலில் ஐவர் போட்டியிடுகின்றனர். அவர்களில் ஸ்ரீ சேனாபதிக் கவுண்டர் அவர்களுக்குப் பேராதரவு இருப்பதாக அறிகிறோம். ஸ்ரீ சேனாபதிக் கவுண்டர் அவர்கள் பொதுஜன ஆதரவு பெற்றவர்; பல துறைகளில் பொது சேவை செய்தவர்; பஞ்சத்தால் வாடும் தமது கிராம மக்களுக்கு கஞ்சித்தொட்டிகள் நடத்தி பட்டினித் துயரைப் போக்கினவர்; இவர் சுயநலமற்ற சேவை செய்யவேண்டுமென்ற எண்ணத்தோடு இத்தேர்தலில் போட்டியிடுகிறார். இவருக்கு இருக்கும் செல்வாக்கால் சட்டசபைக்குச் செல்லாமலே பல அரிய சேவைகளைச் செய்யலாம், எனினும் சட்டசபைக்குச் செல்லும் வாய்ப்பை பொதுமக்களாகிய நாம் சிருஷ்டி செய்து தந்தால், இன்னும் உற்சாகத்துடன் அரசாங்கத்துடன் போராடி, நமது கிராமத்துக்கு வேண்டிய பல நல்ல ஆக்கவேலைகளைச் செய்வார். வேறு மைனர்களைப் போல சுகபோக வாசியல்ல! நல்ல உழைப்பாளி! ஏழைப்பங்காளர்! பொறுப்புள்ளவா! இளைஞர்! கிராமாந்திரங்களில் எங்கு போனாலும் "எங்கள் ஓட்டு ஸ்ரீ சேனாபதிக் கவுண்டர் அவர்களுக்கே!" என்ற ஒரே குரலாக இருக்கிறது. இவர் தேர்தலில் வெற்றிபெற பல முக்கிய பிரமுகர்களும் இளைஞர்களும் மிகவும் ஒத்துழைக்கின்றனர். இன்றுள்ள நிலைமையை நோக்கினால் காங்கிரஸ் படுதோல்வி அடையும் என்று தெரிகிறது. பஞ்சத்தால் பீடிக்கப்பட்ட தாராபுரத் தாலுக்காவுக்கு தற்பொழுது எம். எல். ஏ. வாக உள்ள ஸ்ரீ நடராஜக் கவுண்டரோ, அல்லது நமது காங்கிரஸ் சர்க்காரோ எந்தவித நன்மையும் செய்யவில்லை என்று மக்கள் பேசிக்கொள்கின்றனர். ஸ்ரீ சேனாபதிக் கவுண்டர் அவர்கள் எந்தக் கட்சியின் கட்டுப்பாடின்றி சுயேட்சையாக நிற்பதால், தைரியமாக நமது தாலூக்கா நிலையை அரசாங்கத்திடம் எடுத்துக் கூறுவார் என்றும், அப்படி அரசாங்க உதவி கிடைக்காவிட்டாலும், தமது சுய முயற்சியாலும், பொருளாலும், ஏனைய செல்வாக்குள்ள பிரமுகர்களின் உதவியாலும், பல நல்ல திட்டங்களை உருவாக்கமுடியும் என்ற நம்பிக்கை பொது மக்களிடம் இருந்து வருகிறது; இவர் காலம் சென்ற சங்கரண்டாம்பாளையம் பட்டக்காரர் அவர்களின் ஞாபகார்த்தமாக ஏற்கனவே பள்ளிக்கூடம் பிரசவ ஆஸ்பத்திரி முதலியவைகள் கட்டவேண்டும் என்று திட்டமிட்டுள்ளார் அவசியம் செய்வார் என்ற நம்பிக்கையும் உண்டு. இந்த எண்ணத்திற்கு ஏற்றவாறு நமது ஆதரவும் இருக்குமானால் அவரது எண்ணமும் ஈடேறும் நாமும் நன்மை பெறலாம்! இன்றுள்ள நிலையில் சேனாபதியைப் போன்ற ஒரு பொறுப்புள்ள இளைஞர்தான் நமக்குத் தேவை! கைதூக்கி சலாம் போடும் சட்டசபை சங்கத்தினரை நம்புவதைக் காட்டிலும், முற்போக்கு எண்ணம் கொண்ட ஸ்ரீ சேனாபதிக் கவுண்டர் அவர்கள் எவ்வளவோ மேலானவர் என்று பேசிக்கொள்கிறார்கள்.

குள்ளம்பாளையம் நடராஜக் கவுண்டர் அவர்கள் இத்தேர்தலுக்கு தான் நிற்கப் போவதில்லை என்று கடைசிவரை முக்கிய பிரமுகர்களிடம் கூறிவிட்டு, கடைசி நேரத்தில் எல்லோரும் ஏமாறும்படியாக தன் அபேட்சாப் பத்திரத்தை தாக்கல் செய்தார் இதன் விளைவாக பல பிரமுகர்கள் வெறுப்புற்று ஸ்ரீ நடராஜக் கவுண்டர் அவர்களை இத்தேர்தலிலே தோற்கடிக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு பலமான முயற்சி செய்து வருகிறார்கள் என்றும் சுற்றுவட்டாரத்தில் பேசிக்கொள்கிறார்கள். மற்றும் ஸ்ரீ நடராஜக் கவுண்டர் அவர்கள் இந்தத் தந்திரத்தை (Diplomacy) கையாண்டதற்கு மற்றொரு காரணமும் உண்டு என்றும் அதாவது தனது மாமனார் ஸ்ரீ A. K. சுப்பராயக் கவுண்டர் அவர்களுக்கு காங்கயம் தொகுதியில் பெரிய எதிர்ப்பு ஏற்படாமல் இருப்பதற்காகத்தான் இப்பொழுது தேர்தலில் நிற்காமல் தியாகம் செய்வதைப்போல் நடித்தார் என்றும் பேசிக்கொண்டிருக்கின்றனர். எது எப்படியோ இருக்கட்டும் பொதுவாக இம்முறை ஸ்ரீ நடராஜக் கவுண்டர் தேர்தலில் தோல்வி ஏற்படும் என்று தெரிகிறது; தற்போதுள்ள தேர்தல் நிலையைப் பார்த்தால் ஸ்ரீ சேனாபதிக் கவுண்டர் அவர்களுக்கு அனேகமாக ஆதரவு இருப்பதாகத் தெரிகிறது. அடுத்த இதழில் தேர்தல் பற்றி அப்பொழுதுள்ள நிலைமையைத் தெளிவுபடுத்துவோம்.

(வீரன்)

என். ஜி. ஓ. மனைவிகள் மாநாடு!

என். ஜி. ஓக்கள், இன்று சாதாரணத் தொழிலாளியைவிட குறைவான ஊதியம் பெறுகின்றனர். இவர்களின் நிலை 'பாரங்கல்' மாதிரி பண்டு தொட்டு இன்றுவரை அதே நிலைமையில்தான் இருக்கிறது. காலையிலிருந்து மாலை 6-மணி வரை சதா காகிதக் குப்பைகளோடும், உத்தியோகஸ்தர்களோடும் கதர் ஜிப்பாக்களோடும் போராடிக் கொண்டே இருக்கிறார்கள்! வேலை முடித்து வீடு சென்றாலோ மனைவியிடமும் குழந்தைகளோடும் போராட்டம்! இம்மாதிரி போராட்டத்திலே உருக்குலைந்து வாடி வதங்கி எலும்பும் தோலுமாக ஆனால் பழைய கோட்(டு)டை விடாமல் போட்டுக்கொண்டு இன்னும் ஆபீசுக்கு போய்க்கொண்டுதான் இருக்கிறார்கள். இவர்களுடைய குறைபாடுகளை எத்தனையோ மாநாடுகள், கிளர்ச்சிகள், செய்தும் அரசாங்கம் செவிசாய்த்ததாகத் தெரியவில்லை. என். ஜி. ஓக்களிடம் நல்ல ஒற்றுமை இல்லாததால் அரசாங்கம் அவர்களைப்பற்றி கவலைப்படுவதில்லை. ஆதலால் அவர்கள் குறை இன்னும் தீர்ந்தபாடில்லை. எத்தனையோ பல பெரிய திட்டங்களுக்கு லட்சக்கணக்காகச் செலவு செய்யும் அரசாங்கம் என். ஜி. ஓக்களுக்குச் செலவு செய்யும் வகை 'பணம் இல்லை' என்று கூறுகிறது. புதுப்புது வரிகளை போடுவதில் முன்னணியில் நிற்கும் நமது சர்க்கார் என். ஜி. ஓக்கள் குறைகளை தீர்ப்பதற்கென ஒரு வழி காண முயற்சிக்காதது மிகவும் வருந்தத்தக்கது. என். ஜி. ஓக்களின் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்காக தஞ்சாவூரில் என். ஜி. ஓக்களின் மனைவிமார்கள் மாநாடு நடப்பதாகத் தெரிந்து மகிழ்ச்சியடைகிறோம்.

என். ஜி. ஓக்கள் மனைவிமார்கள் "என். ஜி. ஓக்கள் சங்கத்தின் கட்டளைக்குக் கீழ்ப்படியாத எல்லா என். ஜி. ஓக்களையும் அவர்களது மனைவிமார்கள் பகிஷ்கரிப்பார்கள்" இம்மாதிரித் தீர்மானம் அவசியம் நிறைவேற்றுவார்

(4-ம் பக்கம் பார்க்க)



விஞ்ஞானி ஜி. டி. நாயுடு

சாதாரண கிராமத்தில் பிறந்து, பள்ளியிலே படித்தறியாது, தனது சுய முயற்சியால் முன்னுக்கு வந்தவர்தான் **திரு. ஜி. டி. நாயுடு.** அவர் அநேக அரிய கண்டுபிடிப்புகளை (Invention) கண்டு பிடித்திருக்கிறார். முதன் முதலாக க்ஷவரக் கத்தி (Electric Safety Razor) யை கண்டுபிடித்தார். பஸ்களின் அதிர்ச்சியை சோதிப்பதற்காக ஒரு யந்திரமும் கண்டுபிடித்தார். (Vibrator testing machine) பிலிம் கேமராக்களுக்காக ஒரு நூதன பாகம் அவரால் கண்டு பிடிக்கப்பட்டது. அதன் பெயர் டிஸ்டன்ஸ் அட்ஜஸ்டர் (Distance adjuster) ஓட் பதிவு செய்பக்கூடிய (Vote recording machine) யந்திரமும் கண்டுபிடித்தார். நாயுடு அவர்களிடம் ஒரு சமயம் நாம் பேசிக்கொண்டிருக்கும் பொழுது அந்த ஓட் பதிவு யந்திரத்தை மின்சாரத்தில் இயங்குவது அல்லவென்றும் குறைந்த விலையில் செய்பக் கூடியதாகவும், நாம் யாருக்கு ஓட் அளிக்க விரும்புகிறோமோ அவர்கள் பெயருக்கு மேலுள்ள 'பட்டன்' ஒன்றை அமுக்கினால் ஓட் பதிவாகும் என்றும், மிக விளக்கமாகச் சொன்னார். அனைத்தும் விளக்கி எழுதினால் நூலாகும் என்று அஞ்சுகிறோம். சுமார் 70 ரூபாயிற்கு எல்லோரும் வாங்கக் கூடிய 'ரேடியோ செட்' ஒன்றும் கண்டு பிடித்திருக்கிறார். இம்மாதிரி நாயுடு அவர்கள் சுமார் எழுபது கண்டுபிடிப்புகளை கண்டுபிடித்திருக்கிறார்.

நாயுடு அவர்களுடைய சேவை நாட்டிற்குத் தேவை.

ஐயோ! சுப்பையாவே!

ஸ்ரீ சி. பி. சுப்பையா முதலியாரின் தேர்தல் பிரசாரமே மிகவும் விசித்திரமானது. இந்த நவயுகத்தில் இன்னும் பழைய பத்தாம்பசலிப் பிரசங்கத்தை அவர் விட்டபாடில்லை. அடிக்கடி பிரசங்கம் செய்யும்போது "எங்கப்பரானை" என்று சொல்லுவார் (சத்தியம் என்று சொல்லுவதற்கு பதிலாக) அவர் தனது அப்பாவின் பேரில் ஆணையாக சொல்லுகிறாராம். அவர் தன் அப்பாவைப்பற்றி கொஞ்சங்கூட கவலைப்படுவதில்லை. கவலைப்படுவதற்கு ஞாயமும் இல்லை. தாமஸ் வீதியில் குடியிருக்கும் இவர் யார் என்பது எல்லோருக்கும் தெரிந்த பகிரங்க ரகசியமே! இவர் மற்ற எதிர்க் கட்சிகளையும் சுயேட்சைவாதிகளையும் குறிப்பிடும்பொழுது "அம்மி, குழவி எல்லாம் ஆகாயத்தில் பறக்கும் பொழுது இந்த எச்சிலை எல்லாம் என்ன செய்யும்" என்று பேசுகிறார். ஆம் அம்மி குழவி எல்லாம் ஆகாயத்தில் பறந்தால் அது எல்லோர் தலையிலும்தான் விழும். சுப்பையாவும் ஜாக்கிரதையாகத்தான் இருக்கவேண்டும்! "எச்சில் எலை" பறந்தால் அதில் எஞ்சியுள்ள சோற்றுப் பருக்கையை இந்த உணவுப் பஞ்ச காலத்தில் சிறிதாகிலும் பசியைப் போக்க உதவும் என்பதை சி. பி. சுப்பையா உணர்ந்தாரில்லை. இந்த லட்சணத்தில் இந்த பிரகஸ்பதி ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதியில் தோற்கவிருக்கும் ஸ்ரீ காமராஜருக்கும் பின்னர் எதிர்கால ராஷ்ட்ரபதியாக மனக்கோட்டை கட்டிக் கொண்டிருக்கிறார். சுப்பையாவே! உம் நிலைகண்டு மிகவும் பரிதாபப்படுகிறோம். உம்மையும் தேர்தல் பிரசாரத்திற்கு அழைக்கிறார்களே! அவர்கள் நிலையும் '**அன்சஹிக்கபிள்**'

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

களோ என்னமோ? மனைவிமார்கள் பார்த்து கட்டளை இட்டால் கண்டிப்பாக என். ஜி. ஓக்களும் ஒற்றுமையாக இருக்கக்கூடும். ஏனெனில் மாதர்களின் வார்த்தைகளைக் கேட்காத மனிதக் கூட்டமேயில்லை. புரட்சிக் கவிஞர்

கண்ணின் கடைப்பார்வை
　　காதலியர் காட்டிவிட்டால்
மண்ணில் குமரருக்கு
　　மாமலையும் ஓர் கடுகாம்
கிட்டரிய காதற்
　　கிழத்தியிடும் வேலை
விட்டெறிந்த கல்லைப்போல்
　　மேலேறிப் பாயாதோ?

என்று பாடியுள்ளார்.

இந்த வனிதையர்களின் முயற்சி வெற்றியடைந்து என். ஜி. ஓக்கள் அனைவரும் சுகவாழ்வு பெற அரசாங்கமும் ஒத்துழைக்க விரும்புகிறோம்.

'இடி' தமிழ் வாரச் செய்தித் தாள்

தனிப் பிரதி விலை 1-அணா

எங்கும் ஏஜண்டுகள் தேவை.

(2-ம் பக்க தொடர்ச்சி)

அவர்களுக்கு இதை ஞாபகப்படுத்தவிரும்புகிறோம். சில மாதங்களுக்கு முன்னர் நமது மாகாண பிரதமர் கனம் குமாரசாமிராஜா அவர்கள் கோவை ஹாஸ்டல் திறப்பு விழாவுக்கு வந்திருந்தபோது ஸ்ரீ வெங்கிடசாமி நாயக்கர் அவர்களையும், ஸ்ரீ ராமலிங்கம் செட்டியார் அவர்களையும் வெகுவாகப் பாராட்டி, இவர்கள் இருவரின் ஒத்துழைப்புமிருந்தால் காலேஜ் மிக உன்னத நிலைக்குவரும் என்று கூறியிருக்கிறார். முதன் மந்திரியே பாராட்டுகிற அளவுக்குச் சேவை செய்கிற ஸ்ரீ வெங்கடசாமி நாயக்கர் அவர்களை, இந்த சாதாரண அடித்தளத்தில் இருக்கிற தோழர்கள் குறை கூறுகிறார்கள். இது அவர்களின் இயற்கை போலும்!

வாக்காளர்களே! பொய்ப்பிரசாரத்தை நம்பாதீர்கள்! எந்தவித சுயநலத்தையும் எதிர்பார்க்காமல், யாதொரு கட்சியின் கட்டுப்பாட்டுக்கும் சிக்கி மனசாட்சிக்கு விரோதமாக நடக்காதவருமாகிய ஸ்ரீ வெங்கிடசாமி நாயக்கர் அவர்களுக்கு கூஜா பெட்டியில் வாக்குகளை நிரப்பி, இத்தேர்தலில் காங்கிரசை படுதோல்வியடையச் செய்யுமாறு வேண்டுகிறேன்.

ஸ்ரீ வில்லிப்புத்தூர் வழிகாட்டுமா?

ஸ்ரீ வில்லிப்புத்தூர் வாக்காளர்களே! உங்களுக்கு இருக்கும் மதிப்பு இத்தேர்தலில் யாருக்குமில்லை. உங்கள் வாக்குறுதிகளை நேர்மையாகப் பயன்படுத்தினால் அகில இந்தியாவே கிடுகிடுக்கும் முறையில் ஸ்ரீ காமராஜை அரியச் செய்யலாம். காமராஜரின் தோல்வி காங்கிரஸின் தலைமைப் பீடத்தையே ஆட்டும்! ஆதலால் ஸ்ரீ வில்லிப்புத்தூர் வாக்காளர்கள் சிந்தித்து அறிஞர் ஜி. டி. நாயுடு அவர்கட்கு வாக்களித்தால் நாடு கைத்தொழிலில் முன்னேறும். விஞ்ஞானம் விரைவில் பரவும்; பல்லாண்டுகளாக ஓயாது உழைத்து உழைத்து, சிந்தித்து சிந்தித்து பல அரிய கண்டுபிடிப்புகளை கண்டுபிடித்த நாயுடுவை ஆதரிக்கப் பே கிறார்களா? தந்திரத்தால் பல ஆண்டுகள் தமிழ்நாட்டுக் காங்கிரஸ் தலைவராக இருந்த ஸ்ரீ காமராஜை ஆதரிக்கப்போகிறார்களா? யந்திர வளர்ச்சியை ஆதரிக்கப்போகிறீர்களா? தந்திரக் கதனை ஆதரிக்கப் போகிறீர்களா? உங்களின் முடிவை இந்தியாவே எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது.

இடி இடிக்கிறது!

1. காங்கிரஸ் அபேட்சகர் ஸ்ரீ நடராஜக் கவுண்டர் அவர்கள் கடைகடையாகச் சென்று நமஸ்காரம் போட்டு ஓட்டுக்கேட்பதின் ரகசியம் என்ன?

மணி தாரை

இதில் என்ன ரகசியம் இருக்கிறது; நமஸ்காரம் போடுவதில் அவருக்கு கஷ்டமில்லை; வாக்காளர் அவரிடம வேறு என்ன எதிர்பார்க்க முடியும்; இந்த நமஸ்காரத்திற்கெல்லாம் பொதுமக்கள் வாக்களிப்பார்கள் என்று நம்புவதற்கில்லை.

●

2. ஐக்ய முன்னணிக் கட்சி தேர்தலில் எப்படி நடந்து கொண்டால் நல்லது?

சலாப் - தாரை.

எப்படியும் காங்கிரஸ் அபேட்சகரை தோல்வியடையும்படி செய்யவேண்டியது தான். இதற்காக போராதரவுள்ள சுயேட்சை அபேட்சகரை ஆதரிக்கவேண்டியதுதான்.

●

3. காங்கிரஸ் ஆட்சியில் மது ஒழிக்கப்பட்டது வாஸ்தவமா?

பத்மா—தாரை

அப்படித்தான் காங்கிரஸ்காராகள் தேர்தல் பிரசாரம் செய்கிறார்கள். மதுவிலக்கு சட்டம் இருந்தபோதிலும் 'எஸ்ஸென்ஸ்' என்ற பெயரால் சுமார் ஒன்னரை ரூபாய் விலையில் போதை தரும் புது மதுவை எல்லா மருந்துக் கடைக்காரர்களும் விற்கிறார்கள் என்பது சர்க்காருக்கும் தெரியும்; அந்த காங்கிரஸ் பக்தர்களுக்கும் தெரியும்; சாராயத்தில் ஒருவித நாற்வாடை இருக்கும் ஆனால் இந்த எஸ்ஸென்சில் நல்ல வாடை இருக்கிறதாம்; அச்சமில்லாமல் யாரும் பாக்கெட்டில் வாங்கி அடக்கிச் செல்லலாம். அந்த லட்சணத்தில் இப்பொழுது மதுவிலக்கு இருக்கிறது சுவாமி! வெட்கமில்லாமல் காங்கிரஸ்காரர்கள் மதுவிலக்கு செய்ததாக வேறு பிரசாரம் செய்கிறார்கள்.

●

4. 'காதல் திருமணம்' வெற்றியளிக்குமா?

நடராஜன்—நெல்லை

பொதுவாக நம் நாட்டைப் பொருத்த மட்டில் காதல் விவாகம் செய்தவர்களிடம் காதோடு காது சொடுத்து ரகஸ்யமாக விசாரித்தால் 'தோல்வி' என்று தான் பதில் சொல்லுகிறார்கள். 'காதல்' என்பதற்கு தற்பொழுதுள்ள இளைஞர்கள் கொண்டுள்ள அகராதிப்படி இளமையில் தோன்றுகிற ஒரு ஆசை என்பதுதான்' ஆகவே அத்திருமணம் எப்படி இருக்குமென்று நீங்களே தெரிந்துகொள்ளுங்கள்.

●

தேசிய வாதிகள் என்றால் காங்கிரஸ்காரர்கள் என்று அர்த்தமா?

சிவபெருமான், சென்னை

அல்ல. காங்கிரஸ்காரர்கள் சிலர் அப்படி. சொல்லுகிறார்கள். நாட்டுப் பற்றுடைய எவரையும் தேசியவாதிகள் என்று கூறலாம்.

கோபி வாக்காளர்களே!

உங்கள் தொகுதியில் நிற்கும் அபேட்சகர்களான ஸ்ரீ சி. கே. சுப்பிரமண்ய கவுண்டர் அவர்களும் ஸ்ரீ கருத்திருமன் அவர்களுள் தகுதிவாய்ந்தவர் யார்? என்பதை அடுத்த இடியில் வெளிவரும். மக்களின் ஆதரவைப் பெற்ற அபேட்சகர் யார்? என்பதை நேயர்கள் எழுதியனுப்புமாறு வேண்டுகிறோம். தயவு தாட்சணியமின்றி பிரசுரிக்கிறோம்.

கோபியில் மற்றொரு தொகுதியில் நிற்கும் ஸ்ரீ நல்லாக் கவுண்டர் அவர்களும் சுயேட்சைவாதியான ஸ்ரீ டிப்டாப் நல்லாக் கவுண்டர் ஆகிய இவர்கள் இருவருள் மக்கள் ஆதரவைப் பெறறவர் யார் என்பதைப்பற்றியும் நேயர்கள் எழுதியனுப்புமாறு வேண்டுகிறோம்.

பார்லிமெண்ட் தொகுதிக்கு சுயேட்சை அபேட்சகராக நிற்கும் ஸ்ரீ R. V. E. வெங்கடாசலக் கவுண்டர் அவர்கள், காங்கிரஸ் அபேட்சகர் திரு. T. S. அவனுசிலிங்கம் செட்டியார் அவர்களுள் தகுதியும் திறமையும் வாய்ந்தவர் யார் என்பதை அன்பர்கள் பாரபட்சமின்றி எழுதியனுப்புங்கள். தயவு தாட்சயமின்றி பிரசுரிக்கிறோம். மற்றும் நமது சொந்த அபிப்பிராயமும் அடுத்த 'இடி' யில் வெளிவரும்.

SRI

Kannapiran Mills Limited,

COIMBATORE.

NOTICE.

Notices hereby given that the Annual Ordinary General Meeting of the Share-holders of the Company will be held on Monday the 31st December 1951 at 3 p. m. at the registered Office of the Company at the permises of the Mills to transact the following business:—

1. To receive and adopt the audited Balance Sheet as on 30th September 1951 the audited profit and Loss account for the year ended on that date and the Directors' Report theron.
2. To elect directors in the place of those who retire in rotation.
3. To appoint an Auditor or Auditors for the current year and to fix his or their remuneration.

N. B:— The Share Transfer Books will be closed from 17—12—51 to 31—12—51 (both days inclusive)

NOTICE.

Notice ie hereby given that the Extra-ordinary General Meeting of the Share-holders of the Company will be held on sunday the 20th January 1952 at 3 p. m. at the registered Office of the Company at the premises of the Mills to transact the following business:—

To pass the following as a Special Resolution:-

" Resolved that the following be added as article 100 A of the articles of Association of the Company"

"So long as any monies due to The Madras Industrial Investment Corporation Ltd, under the Mortgage Deed Dated 20—4—51 executed by the Company in its favour remain unpaid they shall be entitled to appoint one person to be a director of the Company the Said Corporation shall be entitled from time to time, to remove such director and re-appoint ony other person in his place. Such director Shall not be required to hold any qualification shares. On the said mortgage being discharged, the said power shall determine and terminate and any director so apointed shall cease to hold office as such director."

By order of the Board,
For SRI KANNAPIRAN MILLS LTD.,
For Venkataswamy Naidu & Co.,
Sd. K. VENKATASWAMY NAIDU,
Partner
Managing Agents.

Coimbatore.
9—12—51.

ஸ்டேண்டர்ட் கிராஸ்வேர்ட்ஸ்

1-2 வார்த்தைப் போட்டி

H. O. கோயமுத்தூர்.

இந்தியாவில் மிகப்பெரியது. இங்கிலீஸ் & தமிழில் நடத்தப்பட்டுவரும் ஸ்தாபனம் இது ஒன்றே!

வாராவாரம் கொடுப்பது ரூ. 10,000
ரூ. 25,000
ரூ. 45,000

இந்த பரிசுத் துகைகளை ஒப்பிட்டுப்பாருங்கள்! ஸ்டேண்டர்ட் கிராஸ்வேர்ட்ஸ் போட்டியில் கலந்து வெற்றிபெருங்கள்.

எங்கும் கலேக்டர்கள் தேவை

எங்கும் புகழ்பெற்ற

குயில் மார்க்கு பீடிகளை

உபயோகியுங்கள்.

சுத்தமான அக்கூள் புகையிலையினல் சுகாதார முறைப்படி

தேக ஆரோக்கியத்தை அனுசரித்து தயாரிக்கப்பட்டது.

குயில் மார்க் பீடிகளை மாத்திரம் மக்கள் விரும்புவதற்கு காரணம்?

மணம் குணம்

எல்லாம் ஒருங்கே!

ஆசிரியர், வெளியிடுபவர் :- பண்டிட் ஜெயிலானி விஷாரத், தாராபுரம். அச்சிட்டது:- ராயல் பிரஸ், ராஜ வீதி, கோவை.